செ.வெ.எண்.86 நாள்:26.07.2017

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரத்தில் மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் இன்று மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.எஸ்.இன்பதுரை அவர்கள் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் மீனவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் பேசியதாவது.

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரத்தில் ஒவ்வொரு மாதமும் மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படும் நாட்டுபடகு மீனவர்களுக்கு அதிக திறன் கொண்ட விசை படகுகளால் ஏற்படும் இன்னல்கள் குறித்து அமைச்சர் தலைமையில் கூட்டம் நடத்தி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் கூடங்குளம் வழக்குகள் தொடர்பாக மீனவர்களின் கோரிக்கைளுக்கு காவல்துறை அலுவலர்களுடன் கலந்து பேசி கமிட்டி அமைத்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.இப்பகுதி மக்களின் குடிநீர் தேவை தாமிரபரனி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தீர்வு காணப்படும் தெரு விளக்குகள் சரி செய்திடவும் பஸ் போக்குவரத்து உள்ளிட்ட கோரிக்கையின் மீது அலுவலர்கள் மூலம் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் மேலும் மீனவர் நல வாரியத்தில் அனைவரையும் சேர்க்கும் வகையில் சிறப்பு முகாம் நடத்தப்படும் மீனவர் கோரிக்கைகள் அனைத்தும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

இக்கூட்டத்தில் இராதாபுரத்தை சேர்ந்த ஒரு பயனாளிக்கு விதவை மறுமன உதவி தொகைக்கான தேசிய சேமிப்பு பத்திரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஸ் இ.ஆ.ப ஊர வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி மீன் வளத்துரை இனை இயக்குனர் திரு. அமல் சேவியர் உதவி இயக்குனர் திரு.வேல்முருகன் மற்றும் அலுவலர்கள் மீனவர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி